**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 50/2024**
திரு.பாண்டித்துரை (P.W –1) **30.07.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் தவறுகள் இருந்தால் உண்மைக்கு புறம்பான சங்கதிகளோ தவறான சங்கதிகளோ இருந்தால் தள்ளுபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அதில் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் இல்லை தட்டச்சுப் பிழைகள் வேண்டுமானால் இருக்கலாம்.

2. நான் இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் விளம்புகை பரிகாரமும் தாவா சொத்தில் பிரதிவாதிகள் என்னுடைய அனுபவத்திற்கு இடையூறு எதுவும் செய்யக்கூடாது என பரிகாரங்கள் கோரிள்ளேன்.எனக்கு சொத்தை விற்பனை செய்தவர் பெயர் சிவசாமியாகும். அவர்களை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு இவ்வழக்கின் உண்மை தன்மை தெரிந்து கொண்டு தான் நான் மேற்படி சிவசாமியை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. மூன்று முதல் ஐந்து பிரதிவாதிகள் முறையான ஆவணங்களை சட்ட முறைப்படி பரிசளித்து தான் ஆவணங்களை பதிவு செய்துள்ளனர் என்று

சொன்னால் சரியல்ல. ஆகவே மூன்று முதல் ஐந்து பிரதிவாதிகளுக்கு எதிரான இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல ஆகவே மூன்று முதல் ஐந்து பிரதிவாதிகளுக்கு எதிரான இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

UMA MAHESHWARI
Digitally signed by UMA MAHESHWARI
Date: 2026.07.30 18:21:20 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.